# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடமாகாணம்

## பயிற்சிப் பரீட்சை - ஏப்ரல் 2017

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - II

**4**

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் ......................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 57 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | ஒப்பம் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்றுப் படுத்துகின்றேன். | V/II/T/ |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன். | V/II/T/ |
| கணித பரீட்சகர்<br>மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | V/II/T/EMF/ |
| பிரதம பரீட்சகர்<br>மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | V/II/T/CH/ |

✧ **கீழ்வரும் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு பந்தியிலிருந்து விடை எழுதுக.**

**01)** ஊக்கமும் விடா முயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள். இன்று நம் வீடுகளில் மின் விளக்குகள் ஒளிர்கின்றன. ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் இந்த மின் விளக்குகள் நம்மிடையே இல்லை. தோமஸ் அல்வா எடிசன் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மின்விளக்குகளைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்தார். தமது முதல் முயற்சியிலே தோல்வி கண்டார். சளைக்காது தனது ஆய்வைத் தொடர்ந்தார். பல முறைகள் தோல்வியைக் கண்ட அவர் இறுதியிலே தம் ஆராய்ச்சியில் வெற்றி கண்டார். மின் விளக்கு ஒளிரத் தொடங்கியது.

"முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கிணங்க வெற்றி பெற்றார். இன்றும் வீடுகளிலே மின் விளக்குகள் ஒளிர முன்னோடியாகத் திகழ்ந்த அறிவியல் மேதை தோமஸ் அல்வா எடிசன் ஆவார்.

i. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சாதனையாளர் யார்?

.......................................................................................................................................

ii. அஃறிணை ஒருமை வினைச்சொல்லை எழுதுக.

.......................................................................................................................................

iii. அறிவு + இயல் என்பதைச் சேர்த்தெழுதுக.

.......................................................................................................................................

iv. பந்தியில் உள்ள இடப்பெயர் யாது?

.......................................................................................................................................

v. விசிறியும் சுழியும் ஒன்றாய் அமைந்த எழுத்து யாது?

.......................................................................................................................................

vi. தீபங்கள் என்பதன் ஒத்த கருத்துச் சொல் யாது?

.......................................................................................................................................

(6 x 1 = 6 புள்ளிகள்)

**02) பின்வரும் வாக்கியங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துக்களை எழுதுக.**

i. கு................ந்தைகள் நி ..................... க்காட்சியைக் கண்டு க ............... த்தனர்.

ii. வைத்தியசா ........... யில் .................... யாளிகள் பருக வெ ................ நீர் கொடுக்கப்பட்டது.

(6 x 1 = 6 புள்ளிகள்)

**03) பின்வரும் வாக்கியங்களுள் வெற்றிடங்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான சொல்லை அடைப்பிற்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i. சூரியனது ................................................... உட்புகாத மரங்கள் அடர்ந்த காடு அது.
(ஒலி, ஒளி, ஒழி)

ii. அவன் எய்த ............................................... பட்டு மான் கீழே விழுந்தது.
(பாணம், பானம்)

iii. நல்ல கருத்துக்களை .................................... ஆர்வம் வேண்டும்.
(அறிய, அரிய)

(3 x 1 = 3 புள்ளிகள்)

சுட்டெண் :..................

**04) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக எழுதுக.**

i. செய்வதைக் / துணிப்பொம்மைகள் / சிவநந்தினி / கவனித்தாள் / கூர்ந்து

..........................................................................................................................................

ii. சகலருக்கும் / பயன்படுகின்றன / மட்டுமன்றி / பத்திரிகைகள் / மாணவர்களுக்கு

..........................................................................................................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**05) பின்வரும் திருக்குறள் அடிகளைப் பூர்த்தி செய்க.**

i. ............................................................................ முய்வுண்டா முய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

ii. கற்க கசடறக் கற்பவை ..............................................................................................

..........................................................................................................................................

(2x 1= 2 புள்ளிகள்)

**06) பின்வரும் வாக்கியங்களிற்கான தனிச் சொல்லை எழுதுக.**

i. சுதந்திரமற்று வாழ்பவன் : ..................................................................................................

ii. வீண் செலவு செய்பவன் : ..................................................................................................

iii. மலையும் மலை சார்ந்த இடமும் : ...................................................................................

(3 x 1= 3 புள்ளிகள்)

**07) அ. பின்வரும் கருத்தைத் தரும் மரபுத் தொடரினை எழுதுக.**

i. குற்றத்தை மறைக்கப் பார்த்தல் ...........................................................................................

ii. பிற்போடல் .........................................................................................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**ஆ. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

i. ஆளனர், ஆளுநர், ஆலுனர், ஆளுணர்.

ii. கத்தரிக்காய், கத்திரிக்காய், கத்தரிக்கய், கத்தரிகாய்

(2 x 1 = 2 புள்ளிகள்)


**08) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

i. Are you ready ? .........................................................................................................


ii. Please come in. .........................................................................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**09) ஒவ்வொரு உருவிற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**



I. ..............................



ii. ............................

(2 x 1 = 2 புள்ளிகள்)


**10) பின்வரும் தமிழ் வாக்கியத்திற்கான சிங்களச் சொற்களைத் தமிழில் எழுதுக.**

i. நாளை குளிக்கவும். ..........................................................................................................

ii. விலையைக் குறைக்க முடியாதா? ......................................................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**11) பின்வரும் ஒவ்வொரு உருவிற்குமுரிய சிங்களச் சொல்லை அதன் உச்சரிப்பில் தமிழில் எழுதுக.**

I.  ..............................................................................................................

ii.  ..............................................................................................................

*(02 புள்ளிகள்)*

**12) "தினமும் பத்திரிகை வாசிப்பதனால் ஏற்படும் நன்மைகள்" எனும் தலைப்பில் 3 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.**

I. ..............................................................................................................................................

..............................................................................................................................................

ii. ..............................................................................................................................................

..............................................................................................................................................

iii. ..............................................................................................................................................

..............................................................................................................................................

*(06 புள்ளிகள்)*

❖ **தரப்பட்ட வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.**


**13)**

| | |
|---|---|
| 9 | 5 |
| 8 | 7 |

**அடைப்பினுள் தரப்பட்ட இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய**

i. மிகப் பெரிய எண்ணை இலக்கத்தில் எழுதுக. .............................................

ii. மிகச் சிறிய எண்ணை விரித்தெழுதுக. .........................................................

**14)** 

**இவ்வுருக்களின் கூட்டுத்தொகையின் மூன்று மடங்கினை உரோமன் எண்ணில் எழுதுக.**

..............................................................................................................

**15) தரப்பட்ட அட்டவணையை அவதானித்து பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.**

| மாதம் | பெண்களின் ஆடை | ஆண்களின் ஆடை |
|---|---|---|
| ஜனவரி | *1541* | *2494* |
| பெப்ரவரி | *427* | *926* |
| மார்ச் | *3751* | *4212* |

i. ஜனவரி மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................................................................

ii. மூன்று மாதங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்களின் ஆடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................................................................

**16) ஒரு தோட்டத்தில் ஜூலை மாதம் 5387 தேங்காய்களும் ஓகஸ்ட் மாதம் 6021 தேங்காய்களும் பறிக்கப்பட்டன. இவ்விரு மாதங்களிலும் பறித்த தேங்காய்களின் எண்ணிக்கையின் வித்தியாசம் யாது?**

..............................................................................................................................................

17) எண் கோலத்தை நிரப்புக.

i. *5015, 5030,* ................................................................, *5060*


ii. *3, 9, 27,* .................... *243,* ...........................................

18) ஒரு பையில் 108 மிட்டாய்கள் உள்ளன. அவ்வாறான 9 பைகளில் உள்ள மிட்டாய்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................................................................

19) குவியலொன்றில் 618 அன்னாசிப் பழங்கள் உள்ளன. அவை 6 பெட்டிகளில் சமனாக அடுக்கப்பட்டன. எனவே, ஒரு பெட்டியில் அடுக்கப்பட்டிருந்த அன்னாசிப் பழங்கள் எத்தனை?

.......................................................................................................................................................

20) 

இவ்வுருவில் காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................................

21) 4 kg 500g சீனிப் பொதியொன்றிலிருந்து 250g நிறையுடைய சிறிய பொதிகள் எத்தனை தயாரிக்கலாம்?

.......................................................................................................................................................


22) காலை 6.30 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்ட பேருந்து இடைவழியில் 30 நிமிடம் தேநீர் அருந்துவதற்காக நிறுத்தப்பட்டது. மீண்டும் பயணத்தை ஆரம்பித்து மாலை 3.45 மணிக்கு பதுளையைச் சென்றடைந்தது.

I. பேருந்து பதுளையை சென்றடைந்த நேரத்தை நியம நேரத்தில் தருக.

.......................................................................................................................................................

ii. பேருந்து பயணத்திற்காகச் செலவிட்ட காலம் எவ்வளவு?

.......................................................................................................................................................


23) 

I. இவ்வுருவின் பெயர் யாது?

..........................................................................................................


ii. இத்திண்ம உருவினைத் தயாரிக்கப் பயன்படும் தளவடிவம் யாது?

..........................................................................................................

24) 

இப்பாத்திரமானது $7l$ கொள்ளளவு உடையது. இதில் $2l\ 750ml$ நீர் தற்போது காணப்படுகிறது. இப்பாத்திரமானது முற்றாக நிரம்புவதற்கு இன்னும் தேவையான நீரின் அளவு யாது?

..........................................................................................................

25) 


இவ்வுருவின் சுற்றளவு யாது?

..........................................................................................

26) ஓர் இனிப்புப் பானப் போத்தல் 9 பேரை உபசரிக்கப் போதுமானது 171 பேரை உபசரிக்கத் தேவையான இனிப்புப் பானப் போத்தல்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

27) ஒரு கொப்பி ரூபா 25.00 வீதம் 5 கொப்பிகளும் ஒரு பேனா ரூபா 12.50 வீதம் 6 பேனாக்களும் வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?

..........................................................................................

*(15 x 2 = 30 புள்ளிகள்)*

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

28) **மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டில் படிமுறை மூன்றைத் தெரிவு செய்க.**

1. உடலைத் தளர்த்துதல்
2. மனதைத் தளர்த்துதல்
3. மனவுறுதி
4. பிரார்த்தனை

29) **விவசாயிகளின் தோழன் என அழைக்கப்படும் உயிரினம் எது?**

1. காகம்   2. மண்புழு   3. ஆந்தை   4. செண்பகம்

30) **இலங்கைக்கே உரித்தான பிராணியாக அமையாதது?**

1. கருங்குரங்கு   2. காட்டுச் செண்பகம்
3. கங்காரு   4. காட்டுக் கோழி

31) **இலங்கைக்கு மேற்கேயுள்ள நாடுகள் எவை?**

1. ஆசிய நாடுகள்.   2. ஆபிரிக்க நாடுகள்
3. ஐரோப்பிய நாடுகள்   4. அவுஸ்திரேலிய நாடுகள்

32) **இலங்கையிலுள்ள இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள மாவட்டம் எது?**

1. திருகோணமலை   2. கொழும்பு
3. காலி   4. காங்கேசன்துறை

33) **நாருரு வேருள்ள தாவரமாக அமைவது**

1. வேம்பு   2. பனை
3. பலா   4. நாவல்


34) **பூச்சிகளை உணவாக உட்கொள்ளும் தாவரம்**

1. நெப்பந்திசு   2. பன்னம்
3. செவ்வந்தி   4. துளசி

35) **காற்றின் மூலம் பரவும் வித்தாக அமைவது**


1. பாகல்   2. சீதேவியார் செங்கழுநீர்
3. பாக்கு   4. புலிநகம்

36) **அருகில் காட்டப்படும் கருவியின் பயன்பாடு**



1.காற்றின் வேகத்தை அறிதல்
2. வளியின் ஈரப்பதனை அறிதல்
3. காற்று வீசும் திசையை அறிதல்
4. திசையை அறிதல்

37) **கீழுள்ள குறியீடு உணர்த்துவது யாது?**



1. பாதுகாப்பாகக் கையாளவும்
2. இப்பக்கம் மேலே
3. முன்னே செல்க
4. மேலே பொருள்களை வைக்க வேண்டாம்.

38) **நீர் நிரம்பிய பாத்திரத்தில் வெள்ளை நிறப் பூக்களை இட்டு எடுத்துச் செல்லும் மரபினர்**

1. தமிழர் 2. சிங்களவர்
3. முஸ்லிம்கள் 4. வேடுவர்

39) **சுவர் கட்டும்பொழுது சுவரின் நிலைக்குத்தைச் சீராக்கப் பயன்படுத்தும் உபகரணம் எது?**

1. மட்டப்பலகை 2. தூக்குக் குண்டு
3. மேசன் கரண்டி 4. நீர்மட்டம்

40) **தையல் வேலையின் பொழுது விரலின் பாதுகாப்பிற்காக அணியும் உபகரணம் எது?**

1. கவசம் 2. கையுறை
3. தீதாள் 4. பாதுகாப்பு மூடி

41) **கறியுப்பில் அடங்கியுள்ள போசணைப் பொருள்?**

1. குளோரைட் 2. அயடீன்
3. கல்சியம் 4. பொஸ்பரசு

42) **பின்வருவனவற்றுள் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?**

1. வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது நீர் நிலைகளில் நீந்தச் செல்லல்.
2. பாதையின் வலது பக்கமாக நடந்து செல்லல்.
3. பாதுகாப்பான குப்பி விளக்குகளைப் பயன்படுத்துதல்.
4. பட்டாசு கொளுத்த முதியவர்களின் உதவியை நாடுதல்.

43) **தேசப் படத்தில் மலை, மேட்டு நிலம் ஆகியவற்றை குறிக்கப் பயன்படும் நிறம் எது?**

1. கபிலம் 2. சிவப்பு
3. மஞ்சள் 4. பச்சை

44) **2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற நாடு எது?**

1. சீனா 2. பிறேசில்
3. கிரேக்கம் 4. எதென்ஸ்

45) **தாதுசேன மன்னன் கட்டுவித்த குளம்**

1. மின்னேரியா 2. கலாவாவி
3. கந்தளாய் 4. மகாகணதரவாவி

46) **இரும்புச் சத்துக் குறைபாட்டால் ஏற்படும் நோய்**

1. குவாசியக் கோர் 2. தொண்டைக் கழலை
3. குருதிச் சோகை 4. மரஸ் மஸ்

**47) செங்கல், ஓடு என்பவற்றை உறுதியடையச் செய்யும் முறை எது?**

1. நீரூற்றுதல்
2. சூளையிடல்
3. உலர்த்துதல்
4. காயவைத்தல்

**48) தற்போது எமது நாட்டில் பதிவுக் கட்டணம்**

1. ரூபாய் 15.00
2. ரூபாய் 7.00
3. ரூபாய் 12.00
4. ரூபாய் 35.00

**49) பண்டைய "கற்பாலம்" காணப்படும் இடம் எது?**

1. பொலன்னறுவை
2. அநுராதபுரம்
3. குருநாகல்
4. யாழ்ப்பாணம்

**50) பாலிலிருந்து தயாரிக்கப்படுவது**

1. மாஜரின்
2. வினாகிரி
3. பாதரசம்
4. யோக்கட்

**51) எமது நாட்டு அரசினால் எமக்கு இலவசமாக வழங்கப்படும் சேவை**

1. சுகாதாரம்
2. பருவகால அநுமதிச் சீட்டு
3. மின்சாரம்
4. தபால்

**52) கிராமிய விளையாட்டாக அமையாதது**

1. பல்லாங்குழி
2. கிட்டிப்புள்
3. கிளித்தட்டு
4. கிரிக்கெட்

**53) அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கேகாலை மாவட்டம் அமைந்துள்ள மாகாணம் எது?**

1. மேல் மாகாணம்
2. மத்திய மாகாணம்
3. சப்பிரகமுவ மாகாணம்
4. ஊவா மாகாணம்

**54) ஷப்தரிசி மண்டலம் என அழைக்கப்படும் உடுத் தொகுதி**

1. துலாம்
2. தென் சிலுவை
3. பெருங்கரடி
4. சிறுகரடி

**55) யானைக்கால் நோயைப் பரப்பும் நுளம்பின் பெயர் என்ன?**

1. அனோப்பிளஸ்
2. ஈடிஸ் வகை
3. கியூலெக்ஸ்
4. அக்பபெட்ஸ்

**56) மீலி மூட்டைப்பூச்சி சேதப்படுத்தும் தாவரத் தொகுதிகள் எவை?**

1. கத்தரி, தக்காளி, வெண்டி
2. போஞ்சி, கரட், பாகல்
3. பூசணி, புடோல், பயற்றை
4. தென்னை, பனை, கமுகு

**57) தோற்கருவிகள் எவை?**

1. றபான், உடுக்கை
2. புல்லாங்குழல், கொம்பு
3. வீணை, தம்புரா
4. சல்லாரி, தாளம்

(30 x1=30 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 04 இன் விடைகள்

**தரம் - 05** **வினாத்தாள் - II**

01. 1) தோமஸ் அல்வா எடிசன் / எடிசன் 2) தொடங்கியது 3) அறிவியல்
 4) வீடு / வீடுகளில் 5) வீ 6) விளக்குகள்
02. 1) ழ, லா, ளி 2) லை, நோ, ந்
03. 1) ஒளி 2) பாணம் 3) அறிய
04. 1) சிவநந்தினி துணிப் பொம்மைகள் செய்வதைக் கூர்ந்து கவனித்தாள்.
 2) பத்திரிகைகள் மாணவர்களுக்கு மட்டுமன்றி சகலருக்கும் பயன்படுகின்றன.
05. 1) எந்நன்றி கொன்றார்க்கு
 2) கற்றபின்
 நிற்க அதற்குத் தக.
06. 1) அடிமை 2) ஊதாரி 3) குறிஞ்சி
07. 1) பூசி மெழுகுதல் 2) ஆறப்போடல் 3) ஆளுநர் 4) கத்தரிக்காய்
08. 1) நீங்கள் தயாரா? 2) தயவு செய்து உள்ளே வாருங்கள்
09. 1) Balloon 2) Carrot
10. 1) ஹெ(ட்)ட நான்ன 2) மில அடு கறன்ன (B) பரி (Dh)த?
11. 1) அம்(B)ப 2) மேசய
12. பொருத்தமான வாக்கியங்கள்
13. 1) 9875 2) 5000+700+80+9
14. XVIII
15. 1) 4035 2) 7632
16. 634
17. 1) 5045 2. 81,729
18. 972
19. 103
20. 12 செங்கோணங்கள்
21. 18
22. 1) 15 : 45h/ மணித்தியாலம்
 2) 8 மணித்தியாலம் 45 நிமிடங்கள்

23. 1) நான்முகி
 2) முக்கோணி
24. 4$l$ 250m$l$
25. 48cm
26. 12 போத்தல்
27. ரூபாய் 200.00

**28 - 57 வரையான வினாக்களுக்கான விடைகள்.**

28. 3
29. 2
30. 3
31. 2
32. 1
33. 2
34. 1
35. 2
36. 3
37. 2
38. 2
39. 2
40. 3
41. 2
42. 1
43. 1
44. 2
45. 2
46. 3
47. 2
48. 4
49. 2
50. 4
51 1
52. 4
53. 3
54. 3
55. 3
56. 1
57. 1

The National e-learning Portal for The General Education